**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.318/2023**

2025 ஆம் வருடம் ஜூலை மாதம் 21 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு . பூபதி (ம.சா.2) | தொழில் | : பால் வியாபாரம் |
| த/பெ. | : திரு. ரவிச்சந்திரன் | வயது | : 23 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : பழைய ஆயக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 21.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :-</u>

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி. என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

சா.சா.ஆ.1 – என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை :–</u>

1. விபத்து சம்பந்தமாக சாட்சியமளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. விபத்து சம்பந்தமாக ஆயக்குடி காவல் நிலையத்தினர் முதல் தகவல் அறிக்கை, மாதிரி வரைபடம், குற்ற அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 மாதிரி வரைபடம்தான் சம்பவ இடத்திற்கான மாதிரி வரைபடமா என்றால் ஆம். அந்த மாதிரி வரைபடத்தில் சாலையின் மையப்பகுதியில் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,

மனுதாரருக்கு ஆதரவாக இடது ஓரமாக விபத்து ஏற்பட்டது என்று கூறுவது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

2. மனுதாரர் தலைக்கவசம் அணிந்திருந்ததாக ஆவணங்களில் இல்லாத நிலையில் மனுதாரருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் யுவராஜா என்னுடன் பிறந்த அண்ணன். மனுதாரர் என்னுடைய சகோதரர் என்பதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.07.21 16:00:53 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.